# இரட்சிப்பு
RATCHIPPU

RATCHIPPU = SALVATION

Volume-13 | December - 2023 | Issue-07

Price Rs.5-00 | Annual Subscription Rs.60/-










## இயக்குநர் கடிதம்... From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

அனைவருக்கும் எங்கள் அன்பின் அட்வென்ட் மற்றும் கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள். பெத்லெகேம் பாலனாம் இயேசுதாமே நம் இல்லங்களிலும் உள்ளங்களிலும் பிறந்து நிறைவாழ்வுக்கு நேராய் நம்மை வழிநடத்துவாராக. கிறிஸ்மஸ் பண்டிகையின் மகிழ்ச்சி புதிய ஆண்டிலும் நிலைத்திருக்க இயேசுவின் நாமத்தில் இரட்சிப்பு குடும்பத்தாராக உங்களை வாழ்த்துகிறோம். அடுத்த ஆண்டின் (2024) முதற்பகுதியில் பாராளுமன்ற தேர்தலை சந்திக்கிறது நம் தாய்த்திருநாடான இந்தியா. நம் தேசம் வளரவும் உயரவும் பாடுபடும் தலைவர்கள் ஆட்சியாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட ஜெபிக்கவும், உழைக்கவும் போராடவும் நம்மை அர்ப்பணிப்போம்.

ஜெப-ஜன்னல்' ஜெப-நேரங்ளில் (டிசம்பர் 08, 15, 22 தேதிகள்) இணைந்து ஜெபிக்கவும், 'அனைவரும்-ஊழியத்தில்' - என்ற நமது கைபிரதி ஊழிய திட்டத்தில் இணையவும், இரட்சிப்பு வேதாகம போட்டிகளில் பங்குபெறவும் உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

'இரட்சிப்பு' பத்திரிக்கை ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், வலைதள ஊழியங்கள் (www.ratchippu.com), புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், மிஷனரி ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் உள்ளிட்ட நமது இயக்குநர் அவர்களின் இம்மாதத்தின் அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபித்திடவும் பங்குபெறவும் உங்களை அன்புடன் அழைக்கிறோம். வேதாகமப் போட்டிக்கான பதில்கள், ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கைகள் அனுப்புவோர் நமது ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள் (Online-வங்கி மற்றும் தொடர்பு விபரம்: பக்கம் 12-ல் தரப்பட்டுள்ளது).

தேவகிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

**வேத-வரிகள்-156** **யோவான் - 1:5,9**

## தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

| சத்திய வேதம் (ரேனியஸ்-1840) | பரிசுத்த வேதாகமம் (பவர்-1867) |
|---|---|
| அந்த ஒளி இருளிலே பிரகாசமாயிற்று. இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை. மெய்யான ஒளியானவர் உலகத்திலே தோன்றுகிற மனிதர் யாவரையும் பிகாசிப்பிக்கிறார். | அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை. உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி. |
| **திருவிவிலியம் (பொது-1995)** | **பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)** |
| அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது; இருள் அதன்மேல் வெற்றி கொள்ளவில்லை. அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி உலகிற்கு வந்துகொண்டிருந்தது. | அந்த ஒளி இருளில் வெள்ச்சம் தந்தது; இருளானது அந்த ஒளியை மேற்கொள்ளவில்லை. எல்லா மக்களுக்கும் வெளிச்சத்தைத் தருகிற அந்த உண்மையான ஒளி உலகத்திற்கு வந்துகொண்டிருந்தது. |

வசன தியானம்-146

# கிறிஸ்துமஸ் கதை

## நற்செய்தியாகிய ஒளியின் கதை

John-1:5.9 யோவான்-1:5,9

**CHRISTMAS STORY IS THE STORY OF GOSPEL-LIGHT**

**அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; உலகத்தில் வந்து மனுக் குலத்தை ஒளிர்விக்கிற ஒளியே அந்த மெய்யானஒளி. யோவா-1:5,9**

கிறிஸ்துமஸ் காலத்தில் நற்செய்தி-பகிர்வது குறித்து 'கிறிஸ்துமஸ் விளக்குகள்' நமக்கு கற்பிக்கின்றன. உண்மையில், கிறிஸ்துமஸ் விளக்குகளுடன் வேதபுத்தம் எனும் விளக்கைப் (ஒளி) பயன்படுத்தி மக்களுக்கு நற்செய்தியை பகிர்வோம். கிறிஸ்துமஸ் வண்ண-ஜால ஒளி-விளக்குகளை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு சுட்டிக்காட்டுங்கள். கிறிஸ்துமஸ் கதையானது ஒளியின் கதை. யோவான் இயேசுவை விவரிக்க 'ஒளி' என்ற பதத்தை 5முறை உபயோகிக்கிறார் (யோவா-1:4,5, 7-9). இயேசு: ''உலகின் ஒளி நானே. என்னை பின்பற்றுகிறவன் இருளில் நடக்காமல் ஜீவ-ஒளியைப் பெற்றிருப்பான்'' (யோவா-8:12) என்றார்.

நமது பாவத்தை நமக்கு உணர்த்தவும், மரண-இருளிலிருந்து நம்மை மீட்டெடுத்து, தமது ஒளியின் ராஜ்யத்தில் சேர்க்கவுமே ஒளி (இயேசு) இவ்வுலகில் உலகில் வந்தது (கொலோ-1:13). ''இருளிலும் மரண-நிழலிலும் இருப்போருக்கு ஒளி கொடுக்கவும், நமது கால்களை அமைதியின் பாதையில் நடத்தவும், ஒளி (இயேசு) இவ்வுலகில் வந்தது என்றார் சகரியா என்ற பக்தர் (லூக் 1:79).

கிறிஸ்துமஸ் காலத்தில் இயேசுவை அறியாத நண்பர்களை நாம் சந்திக்கும்போது கிறிஸ்மஸ் ஒளியின் நற்செய்தியை அறிவிக்க இரண்டு எளிய வழிகள் உள்ளன.

**1. கிறிஸ்துமஸ் கதைகொண்டு ஒளியை காட்டுவோம்:**

லூக்கா நற்செய்தியில் காணப்படும் கிறிஸ்துமஸ் கதையை படிக்க உங்கள் நண்பர்களுக்கு ஊக்கமளியுங்கள். அல்லது உங்கள் நம்பிக்கையற்ற நண்பர் களுடன் ஒரு கிறிஸ்மஸ் உரையாடலைத் தொடங்குங்கள். குறைந்த பட்சமாக, நாம் ஏன் கிறிஸ்துமஸ் கொண்டாடுகிறோம் என்பதை விவரித்துச் சொல்லுங்கள்.

**2. கிறிஸ்மஸ் ஒளிகொண்டு இருளில் ஒளிர்வோம்:**

நாமே மக்களுக்கு வெளிச்சமாய், கிறிஸ்துமஸ் ஒளியாய் இருக்க முடியும். இயேசு, ''நீங்கள் உலகிற்கு ஒளியாயிருக்கிறீர்கள்'' ''மனிதர் உங்கள் நற்கிரியை களைக் கண்டு, உங்கள் பிதாவை மகிமைப் படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கட்டும்'' என்றார் (மத்-5:14,16). ''ஒளியின் பிள்ளைகளாக நடவுங்கள்'' என்கிறார் (எபே-5:8) பரி.பவுல். இயேசுவின் அன்பை பிரதிபலிக்கும் நாம் உலகிற்கு விளக்குகள். எனவே, இந்த கிறிஸ்துமஸ் காலத்தில் கிறிஸ்துவின் ஒளிகொண்டு நற்செய்தியை பகருவோம். கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.



REV. DHARMARAJA

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழியவு இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதி வு ஊழியங்கள், சென்னை–93. தென்னிந்தியா.

கிறிஸ்துமஸ் சிறப்பு தேவசெய்தி...



அருட்திரு. மோகன்ராஜ்

# இம்மானுவேல்

## கடவுள் நம்மோடு இருக்கிறார்

கர்த்தாவே, உமது கிருபையை எங்களுக்குக் காண்பித்து, உமது இரட்சிப்பை எங்களுக்குஅருளிச்செய்யும்.

## Immanuel - God with us

**Rev. D. Mohanraj**
PRESBYTER IN-CHARGE AND CHAIRMAN
CSI VYASARPADI PASTORATE (ST.PETER'S CHURCH), VYASARPADI, CHENNAI-39, SOUTH INDIA

அன்பான இரட்சிப்பு இதழ் வாசக பெருமக்களே!

இவ்வாண்டின் கிறிஸ்மஸ் பிறப்பு காலங்களில் 'இரட்சிப்பு' இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். அனைவருக்கும் கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்.

ரஷ்யா-உக்ரைன், இஸ்ரவேல்-காசா போன்ற கொடூரமான போர்கள் - போராட்டம் இவற்றில் சிறுவர்கள், பெண்கள் என்றும் பாராமல் மக்களை கொன்று குவிக்கும் நிலை. மட்டுமல்ல, வாழ்வதற்கு வீடுகள் இன்றி, உணவு இன்றி, குழந்தைகளுக்கு பால் இல்லாமல் வாழ்வே அற்றுபோன சூழல். நல்வாழ்வையும் சமாதானத்தையும் விடுதலையையும் விரும்பி ஏங்கும் சூழ்நிலையில் மக்களின் வேதனை அதிகரித்துக்கோண்டே இருக்கிறது. கிறிஸ்து பிறந்தபோது ஆண் பிள்ளைகள் கொல்லப்பட்ட நிலையில் இராமாவின் மக்கள் மன-அமைதியின்றி கொடூர ஆட்சியின் முடிவை எதிர்நோக்கியவர்களாக சமாதானம், சமத்துவம், சமநீதி, சமஅந்தஸ்த்து நிறைந்த இறையாட்சி மலர காத்துக்கொண்டிருந்த அதே சூழல்தான் இன்றும் நிலவுகிறது. பொருளாதார சீர்கேடுகள், வரிச்சுமைகள் இவற்றோடு குடிக்கும் தண்ணீர், சுவாசிக்கும் காற்று போன்றவை பண-மயம் ஆக்கப்பட்டிருக்கின்ற சூழலில் மக்களுக்கு அமைதி-வாழ்வு (சமாதான) முழுமையாக கிட்டாத நிலை. சங்கீதம் 85:7ன்படி மக்களின் பல்வேறு அவல நிலைகள் மாறி அமைதி திரும்ப கடவுளின் கிருபையும், நீதியும், சமாதானமும் மக்களுக்கு கிடைக்க நாம் ஜெபிக்க வேண்டும். தன்னலம் நிறைந்த உலகில் கிறிஸ்துவின் பிறப்பை எப்படி பொருள்ளுள்ள விதத்தில் கொண்டாட போகிறோம் என்பதை சிந்தித்து செயல்பட உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**1. கடவுளின் அருள் மற்றும் பாதுகாப்புக்காக நன்றி:**

(Gratitude for God's Favour and Restoration).

தன்னலம் மற்றும் அநீதி நிறைந்த ஆட்சியாளர்களின் சூழ்ச்சிக்கும் கோபத்திற்கும்

இயேசு தப்புவிக்கப்பட்டார். ஆனால் இராமாவில் இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைவரும் சாகும் நிலை ஏற்பட்டது. இதனால் இராமாவில் அழுகுரல் ஏற்பட்டது. இது பல கேள்விகளையும் சந்தேகங்களையும் நமக்குள் எழுப்புகிறது. எனினும் இது இயேசுவின் பிறப்பினால் மட்டும் ஏற்பட்டது அல்ல மாறாக ஏரோதின் சுயநலம், அராஜகம், அநீதியான செயல்பாடுகளால் தான் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். இது தொடர்கதையாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது தான் உண்மை. அதனால் தான் 'ஏரோதுக்கு மகனாய் பிறப்பதைக் காட்டிலும் அவன் வீட்டில் ஒரு பன்றியாயிருப்பது மேல்' என்றதொரு பழமொழி வழக்கில் உள்ளது. இன்றும் தீமை நிறைந்த நாட்டில் குடிமக்களாய் இருப்பது எவ்வளவு கடினம் என்பதை புரிந்துணர அழைக்கப்படுகிறோம்.

எகிப்திய அடிமைத்தனம் (யாத்-3:9), பாபிலோனிய சிறையிருப்பு (எரே-31:15) இவற்றில் ஏற்பட்ட ஒப்பாரி ஓலங்கள் இன்றுவரை ஓயவில்லை என்பதே உண்மை. அவ்வித மாகவே, உலகிற்கு சமாதானத்தையும், புதுவாழ்வையும் கொண்டு வந்த மீட்பர் இயேசுவையும் கொடுங்கோல் ஆட்சியாளர்கள் விட்டு வைக்கவில்லை. இந்நிலை யில் இயேசுவையும் அவரது மீட்பின் நோக்கத்தையும் புரிந்துக்கொண்டு அவர் வழியில் நடக்க, துன்பங்களை ஏற்று மனுகுலத்தை சமாதான வழியில் நடத்தி அவர்களுக்கு நிறைவாழ்வையும் மீட்பையும் பெற நம்மை அர்ப்பணித்து வாழ்வோம். இம்மானுவேல் கடவுள் நம்முடன் இருக்கிறார்.

**2. கடவுளின் இரட்சிப்புக்காக மன்றாட்டு:**

(Prayer for God's Protection).

உலகின் அதிகாரங்கள், அராஜகங்கள், அடக்கு-ஒடுக்குமுறைகள், அநீதிகள் மற்றும் மாய்மாலங்கள் இவற்றின் ஆதிக்கங்களிலிருந்து மனுக்குலம் இரட்சிக்கப் பட இயேசு நம்முடன் இருக்கிறார் என்பதை உணர்ந்தவர்களாக நாம் திறப்பின் வாசலில் ஜெபிக்க கடமைப்பட்டிருகிறோம் என்ற உணர்வுடன் சங்-120ஐ மனதில் கொண்டு ஜெபிப்போம். சங்கீதம் 85:6,7ன்படி சங்கீதக்காரருடைய ஏக்கத்தைப் புரிந்துக்கொண்டு, ''கர்த்தாவே உமது கிருபையை எங்களுக்குக் காண்பித்து உமது இரட்சிப்பை எங்களுக்கு அருளிச்செய்யும்'' என்று ஜெபிப்போம். கிறிஸ்து பிறப்பினால் கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்தித்து, நீதியும் சமாதான மும் ஒன்றையொன்று முத்தம் செய்திருக்கிறது என்பதை எண்ணி ஆண்டவரை துதிப்போம். போர், கொள்ளை நோய்கள் மற்றும் பேரழிவுகளிலிருந்து நம்மை இரட்சித்து பாதுகாத்து புதுவாழ்வை கொடுத்து வரும் ஆண்டவருக்கு நன்றி படைப்போம்.

கிறிஸ்து பிறப்பை ஒட்டிய நிகழ்வுகளில் கூட அவரது இரட்சிப்புக் காக காத்திருந்த சிமியோன் 'உம்முடைய இரட்சண்ணியத்தை என் கண்கள் கண்டது' என்றார். அன்னாள் என்ற மூதாட்டி கர்த்தரை புகழ்ந்து அவர் மீட்புக்காக காத்திருந்த யாவருக்கும் அவரைக்குறித்து பேசினார் என திருமறையில படிக்கி றோம். எனவே மனுக்குலம் இரட்சிக்கப்பட காத்திருப்போம், இம்மானுவேல் குறித்து பேசுவோம்; மேலும் ஊக்கமாய் ஜெபித்து செயல்படுவோம். கடவுள் எல்லா சூழல்களிலும் நம்முடன் இருக்கிறார்.

**3. கடவுள் ஆட்சிக்காக செயல்படுதல்:**

(Working together for the Kingdom of God)

கிறிஸ்து பிறப்பு ஆர்ப்பரிப்போடு கொண்டாட வேண்டிய ஒன்றுதான் எனினும் இது வெறும் கொண்டாட்டங்களோடு முடிந்துவிடுவது அல்ல. மாறாக, நம்மை வலுப்படுத்தி அச்சம் நீக்கி மீட்பின் நற்செய்தியை உலகெங்கும் பறைச்சாற்ற உறுதி ஏற்பது ஆகும். இதில், அடிமைத்தனங்களிலும் துன்பங்களிலும் வாழும் மக்கள் விடுதலை முழக்கத்தோடு மனந்திரும்பி மீட்பரையும் அவர் அருளும் இறையரசையும் ஏற்று இணைந்து உழைக்கத் தூண்டுதல் பெறுவது மிக மிக அவசியமானது. நமது ஆண்டவர் இயேசுவின் திருவுளமும் இதுவே. இறையாட்சி நிலையானது; அது அமைதியையும் அகமகிழ்வையும், நிறைவாழ்வையும், நீதியுடன்கூடிய நித்திய வாழ்வையும் தரவல்லது என்பதை உணர்ந்து ஊக்கமுடன் செயல்பட அழைக்கப்படுகிறோம். முழுக்குமுனிவர் யோவான் மற்றும் நமது ஆண்டவர் இயேசு ஆகியோரின் முதல் அருளுரையும் ‘மனம்மாறுங்கள் இறையரசு நெருங்கி வந்துவிட்டது’ என்பதே. இதைச் செயல்படுத்துவதில் புளித்த மாவைப்போல மறைந்து செயல்படுவது, முத்துக்களை-புதையலைத் தேடுவது போல தேடிப் பெற்றுக்கொள்வது, கடுகுவிதை போல சிறு துவக்கமாக செயல் படுவது போன்ற உவமைகளை புரிந்து செயல்பவோம்.

அனைவருக்கும் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துகள். மூவொரு கடவுளின் அன்பும் அருளும் அமைதியும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.


கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
**அருட்திரு. டி. மோகன்ராஜ்**

அருட்திரு. டி. மோகன்ராஜ், ஆயர் மற்றும் தலைவர், சி.எஸ்.ஐ. வியாசர்பாடி குருசேகரம் (தூய. பேதுருவின் ஆலயம்), வியாசர்பாடி, சென்னை-39. தென்னிந்தியா.

# அட்வென்ட் - திருவருகைக் காலம்

‘அட்வென்ட்’ என்பது கிறிஸ்துவுக்கு காத்திருக்கும் திருச்சபைப் பாரம்பரியம் ஆகும். ‘அட்வென்ட்’ என்ற சொல் ‘வருகை’ என பொருள்படும் லத்தீன் சொல் ஆகும். அட்வென்ட் அல்லது திருவருகை காலம், கிறிஸ்மஸ்-க்கு முன்வரும் 4வது ஞாயிறு (அட்வென்ட் ஞாயிறு) தொடங்கி, கிறிஸ்துமஸ்-ஈவ் தினத்தில் முடிவடையும் நான்கு ஞாயிற்று கிழமைகளை உள்ளடக்கிய காலம் ஆகும்.. ‘அட்வென்ட்’ கொண்டாட்டங்களில் சிலுவைக்கொடி ஏற்றுதல், மெழுகுவர்த்தி ஏற்றுதல், பாடல்கள் பாடுதல், ஸ்டார் போடுதல், கிறிஸ்மஸ்-மரம் வைத்தல், சான்டா-கிளாஸ்-கேரல்-வீடு சந்தித்தல் போன்றவையும் ‘சப்போஸ் கிறிஸ்மஸ்’ அல்லது ‘மாக்-கிறிஸ்மஸ்’ ‘கிறிஸ்மஸ்-பரிசுப்பரிமாற்றம் உள்ளிட்ட விழாக்களும் அடங்கும். உண்மையான ‘அட்வென்ட்’ என்பது இயேசு கிறிஸ்துவை மையமாகக்கொண்டு திருவருகையின் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வதாகும்.

வேத ஆராய்ச்சி - 79



Rev. Dr. சுரேஷ் ராஜன்

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

Author: Rev.Dr. D. Suresh Rajan

## சங்கீதம் - 79

EPISODE-79

**முன்னுரை:-** இச்சங்கீதம், ஆசாபின் வழித்தோன்றல்களில் ஒருவராலோ அல்லது ஆசாப் என்னும் பெயர் கொண்ட வேறொருவராலோ எழுதப்பட்டிருக்கலாம் என திருமறை ஆய்வாளர்கள் கருதுகின்றனர். வேறு சிலர், தாவீது மற்றும் சாலோமோன் காலத்தில் ஆஸ்தான கவிஞராயிருந்த ஆசாப், தீர்க்கத்தரிசனமாக இச்சங்கீதத்தை எழுதியிருக்கலாம் என கருதுகின்றனர். இந்த சங்கீதம், 'நியாயத்தீர்ப்பின் பாடல்கள்' (Impregatory Psalms) என்ற வகையைச் சேர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. கடவுள் தமது எதிரிகள் மீது நியாயத்தீர்ப்புச் செய்து அவர்களை அழிக்கவேண்டும் என்பது இதன் கருப்பொருளாகும். கிறிஸ்துவுக்குப் பின் வாழும் நமது எண்ணங்களுக்கும், கிறிஸ்துவின் போதனைகளுக்கும் இந்த சங்கீதத்தின் கருத்து உடன்படாமல் இருக்கலாம்; ஆனால், இச்சங்கீதத்தை விளங்கிக்கொள்ளவேண்டுமானால், பழைய ஏற்பாட்டின் காலத்தில் நடந்த யுத்தங்கள், இஸ்ரவேலின் தேவனுக்கும் அந்நிய தேவர்களுக்கும் இடையே நடந்த யுத்தங்களே, என்ற கோணத்தில் நாம் பார்க்கவேண்டியது அவசியமாகும். இஸ்ரவேல் மக்கள் விக்கிரகாராதனை செய்தபோதெல்லாம் தேவபிரசன்னம் அவர்களைவிட்டு விலக, தோல்வியைத் தழுவினார்கள். அவர்கள் மனந்திரும்பி தேவனோடு சீர்பொருந்தியபோது வெற்றிபெற்று யேகோவா மட்டுமே உண்மையான கடவுள் என உறுதிகொண்டனர். இச்சங்கீதம் எழுதப்பட்டதன் பின்னணியை அறிந்து கொள்ள வேண்டுமானால், 2ராஜா 25:1-30, 2நாளா 31:11-21, எரே 39:1-14, எரே 52:1-34 ஆகிய வேத-பகுதிகளை வாசிப்பது அவசியமாகும். சிலுவையின் மறுபக்கத்தில் வாழும் நமக்கு இச்சங்கீதம் எவ்விதத்தில் ஆசீர்வாதமாக இருக்கும் என்பதை சுருக்கமாக இங்கு தியானிப்போம்.

### 1. கடவுளின் சுதந்தரம்:- (வசனங்கள் 1-4)

பழைய ஏற்பாட்டில் எருசலேம் நகரம் கடவுளின் சுதந்தரமாக (Inheritance) கருதப்பட்டது. யேகோவா தேவனை வணங்காத புறவினத்தவர் தேவாலயத்தில் நுழைவது யூதர்களுக்கு அருவருப்பாகக் காணப்பட்டது. ஆனாலும், எருசலேம் தேவாலயம் புறவினத்தவரால் சூறையாடப்பட்டு, எருசலேம் நகரம் மண்மேடான சம்பவம் இஸ்ரவேலின் தேவனுக்கு ஏற்பட்ட மிகப்பெரிய இழுக்காக கருதப்பட்டது. கடவுளுடைய மக்கள் கொல்லப்பட்டு, அவர்களின் சடலங்கள் முறைப்படி அடக்கம் செய்யப்படாமல் ஆகாயத்துப் பறவைகளுக்கு ஆகாரமாக போடப்பட்டது ஒரு பெரும் இகழ்வான நிகழ்வாக எண்ணப்பட்டது. இதன் வழியாய் இறைவனது

பெயர் இகழப்படுவதை ஆசாப் இங்கு குறிப்பிடுகிறார்.

புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்தில் நமது உடல், இறைவன் வாழும் இல்லமாக சித்தரிக்கப்படுகிறது. நம்முடைய சரீரம் எவ்வளவாக போற்றப்படவேண்டும் என்பதை நாம் இங்கு உணரவேண்டும். பொல்லாத பிசாசு கர்ச்சிக்கிற சிங்கம் போல யாரை விழுங்கலாம் என சுற்றித்திரிகிறான் (1பேதுரு-5:8) என வேதத்தில் அறிகிறோம். நாமும் பல தருணங்களில் பிசாசின் தந்திரங்களில் சிக்கி இறைவன் தங்கும் இல்லமாகிய நம் சரீரத்தைக் கறைபடுத்துகிறோம். தீய பழக்கவழக்கங்கள் காரணமாக நமது சரீரத்தை அசுத்தமாக்கிய நிலையில், தேவனுடைய நாமத்துக்கு அவகீர்த்தியைக் கொண்டுவருகிறோம் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். பெருந்தீனி, பாலுறவுக்கடுத்த பாவங்கள், மது மற்றும் போதை பொருட்களுக்கு அடிமையாதல் என இப்பட்டியல் நீண்டுகொண்டே செல்லுகிறது. கிறிஸ்துவின் விசுவாசிகள், ஊழியர்கள் என தங்களை அடையாளப் படுத்துகிற பலரும் தங்கள் சரீரம் கெடுக்கப்படுவது குறித்து எவ்வித கவலையும் இன்றி தேவநாமத்துக்கு நிந்தனை வரச்செய்வது மிகப் பரிதாபகரமான விடயம்.

அன்பர்களே! சற்றே நாம் சிந்திப்போம். தேவன் தங்கும் ஆலயமாகிய நமது சரீரங்களை கனத்துக்கு உரியதாக நாம் பேணிக்காக்கிறோமா?

**2. பாவமன்னிப்பிற்கான விண்ணப்பம்:- (வசனங்கள் 5-9)**

''பாவம், எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி'' (நீதி-14:34) என வேதம் சொல்லுகிறது. இதை நன்கறிந்த சங்கீதக்காரரான ஆசாப், இறைவன் தமது ஜனங்களின் மீறுதல்களையும் அக்கிரமங்களையம் மன்னித்தருளி அவர்களுடைய தாழ்ச்சியிலிருந்து அவர்களை உயர்த்தும்படியாக விண்ணப்பம் செய்வதை இப்பகுதியில் நாம் காண்கிறோம். ஒருவேளை புதிய ஏற்பாட்டு விசுவாசிகள், 'சத்துருக்கள் அழிந்தொழிய வேண்டும்' என்று மாம்ச பிரகாரமாக ஜெபிக்கக்கூடாது; மாறாக, நமது பாவங்கள் மன்னிக்கப்பட, பிசாசின் பிடியிலிருந்து நாம் மீட்கப்பட, பிசாசின் சோதனைகள் தோற்கடிக்கப்பட ஜெபிக்கவேண்டும் என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. ஆகவே, நாம், இயேசுவின் இரத்தத்தினாலே பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றவர்களாக, பிசாசின் கிரியைகள் நம்மிலே அழிக்கப்படும்படிக்கு கடவுளின் பாதத்தை அடையவேண்டும்.

**3. புத்தாக்கம் பெற்ற வாழ்வு:- (வசனங்கள் 10-13)**

பாவத்தினால் வீழ்ச்சியடைந்து, அந்நியருக்கு முன் அவமானப்பட்ட இறைமக்கள், மறுபடியும் சாட்சிகளாய், யேகோவா தேவனின் புகழையும் மாட்சியையும் மனுக்குலத்துக்கு பறைசாற்றுகிறவர்களாய் மாறும்படிக்கு அவர்களுடைய வாழ்வு புத்தாக்கம் பெறவேண்டும் என ஆசாப் இப்பகுதியில் தெளிவாக குறிப்பிடுகிறார்.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! வீழ்ச்சியடைந்த நமது வாழ்வின் அனைத்து பகுதிகளும் கிறிஸ்துவின் அருளினாலே புத்தாக்கம் பெறவேண்டும். ஒருவர் கிறிஸ்தவராய் மாறும்பொழுது புதுப்பிறப்பாக மாறுகிறார் (2கொரி-5:17) தோல்விகள், வீழ்ச்சிகள், அவமானங்கள் யாவும் அகன்று, முற்றிலும் புதுப்படைப்பாக அவர் புதிய வாழ்வை துவக்குகிறார். இத்தகைய புத்தாகம் முதலாவதாக நம் உள்ளத்தில் உருவாக வேண்டும் (ரோம-12:2).

முடிவுரை:-

உமது ஜனங்களும் உம்முடைய மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நாங்கள் தலைமுறை தலைமுறையாக உமது துதியைச் சொல்லிவருவோம் (வச-13). தேவனுடைய ஆலயமாகிய நமது சரீரத்தை தூய்மையாய் காத்து, தேவன் அருளும் பாவமன்னிப் பாகிய மீட்பைப் பெற்றவர்களாய் நம் சந்ததியிலும், பின்வரும் தலைமுறையிலும் கடவுளுக்கு புகழ்சேர்க்கும் வாழ்வு வாழ கடவுள் கிருபை புரிவாராக. ஆமென்.

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

## PRAYER-WINDOW PRAYER-WINDOW

## ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

### ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் டிசம்பர் - 2023

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 08-12-2023 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 15-12-2023 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 22-12-2023 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி **''தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க''** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

**CONTACT DETAILS OF OUR MINISTRIES:**

**MOBILE:** 9962924900/7871676100
**WHATSAPP:** 9789914463/7871676100
**E-MAIL:** sjddharmaraja@gmail.com
**POSTAL ADDRESS:** REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93
**WEBSITE:** www.ratchippu.in/ratchippu.in

**BANK DETAILS FOR SENDING OFFERTORY:**

NAME: DHARMARAJA SJD.
S.B. ACCOUNT NO: 601071548.
BANK AND BR.: INDIAN BANK, NESAPAKKAM
IFSC CODE: IDIB000N122.
BANK ADDRESS: NESAPAKKAM, CHENNAI-78.
GOOGLE PAY (G-PAY) NAME AND NO.:
REV. DHARMARAJA SJD: 9789914463

**வேதாகம போட்டிக்கான பதில்களை அனுப்பவேண்டிய முகவரி**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

**ADDRESS FOR SENDING ANSWERS OF BIBLE CONTEST**

Mrs. Jeyaseeli Dharmaraja, F-1, First floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93. E-mail: ratchippu@hotmail.com/ sjddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463

# வேதாகம போட்டி–157 சரியான பதிலளித்தோர்

1) அமலியா லோகநாதன் TVM
2) அமிர்தகனி பொன்ராஜ் CHE
3) அன்பு சுதந்திரம் TIN
4) ஏஞ்சல் சி. TIN
5) ஏஞ்சல் ராஜதுரை CHE
6) ஏஞ்சலின் பிரியா ஏ. TIN
7) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் CHE
8) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
9) அன்னாள் ஜெபக்கனி CBE
10) அனி பாய் ஜாண் TIN
11) அனிதா மோகன்ராஜ் ERO
12) அரோமா சாத்ராக் TIN
13) ஆர்தர் மாசில்லாமணி CHE
14) அருள்செல்வி VIR
15) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
16) பாமா மாதவன் KAL-AP
17) பெல்சி தங்கராஜ் CHE
18) பெனிட்டா பிராங்க்ளின் CHE
19) பியூலா அலெக்ஸ் CHE
20) பியூலா ஜேசுராஜன் PON
21) செலினா பென்சி வில்சன் DR, KUW
22) சந்திராபாய் மாசிலாமணி AVD
23) சந்திரலேகா KAL-AP
24) சந்திரா சாமுவேல் TIN
25) சார்லஸ் ∴பின்னி DR CHE
26) சார்லஸ் சாலோமோன் WG-CMR SHI
27) சார்லட் டேவிட் CHE
28) சிட்டி TR TVL
29) கிறிஸ்டல் ஜாய் யோபு CKA-TPT
30) கிறிஸ்துதாஸ் GOP
31) கிறிஸ்டி ஞானராஜ் CHE
32) கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார் TUT
33) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
34) டெய்ஸி ஜெபதாஸ் TCY
35) டெய்ஸி சாம் KAL-AP
36) டேனியல் தாமஸ் TIN
37) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
38) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
39) தெபோராள் ஆனந்தமணி TUT
40) டெல்வின் இம்மானுவேல் CBE
41) தேவமணி ஆபிரகாம் TUT
42) தேவநேசம் ராஜாசிங் CHE
43) டோராபாய் CHE
44) எலிசபெத் செல்லத்துரை CHE
45) எமிமாள் மில்டன் CHE
46) எமிமாள் சாமுவேல் (ஜெஸிக்கா) MDU
47) எஸ்தர் D.R. TIN
48) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
49) குளோரி ரவீந்திரன் TIN
50) ஞானம் ஜெபராஜ் TIN
51) ஞானம் பிலிப் CHE
52) ஞானராணி G. TVL
53) ஞானசெல்வி மோசஸ் USA
54) கோல்டா ஜேசுபாதம் MUM
55) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
56) கிரேஸ் பிரின்ஸ் APM-TEN
57) கிரேஸ்லின் சாந்தி TIN
58) கிரேஸி கிறிஸ்டோபர் CHE
59) கிரேஸியா ஜெயபால் CHE
60) கிரிசெல்டா செய்லர் CHE
61) ஹெலன் ஜான்சிராணி TIN
62) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
63) ஹெலன் திலக் TUT
64) ஹேமா அஜீத் CHE
65) ஹேமா கேப்ரியேல் BAN
66) ஹெப்சிபா மங்களராஜ் TIN
67) ஹிம்லா ராஜகுமாரி CHE
68) இளவரசி ஜோபிதா CBE
69) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
70) இந்திரா கெத்ஸி டேவிட் TIN
71) ஜமீலா செல்வராஜ் CHE
72) ஜேன்ஸ் (ஜான்ஸி) ANI
73) ஜேன் தர்மராஜ் TIN
74) ஜான்ஸி ராணி CHE
75) ஜான்ஸி சந்தியா MKM
76) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
77) ஜெபக்குட்டி மோசஸ் TIN
78) ஜெபரஞ்சிதம் மெர்லின் TUT

79) ஜெபசீலி கிளின்டன் CHE
80) ஜெபா சீனி MAR TIN
81) ஜெபஸ்டின் G. TIN
82) ஜீவா டேவிட் சாலோமோன் APM-TEN
83) ஜெமீலா நிக்ஸன் CHE
84) ஜெனிலா CHE
85) ஜெனித்தா செல்வின் TIN
86) ஜெனிட்டா ஷெருபா ஞானவேல் DHA
87) ஜெரின் ஸ்டீபன் MUM
88) ஜெஸி செல்லதுரை CBE
89) ஜெஸி ஜெயக்குமார் TIN
90) ஜெயா ஆல்பர்ட் KUM
91) ஜெய செல்வி M. TIN
92) ஜோனா ஸ்டீபன் AVD
93) ஜோஸ்.ஃபின் ஜெஸி CHE
94) ஜாய்ஸ் பாண்டியன் CHE
95) ஜூலியட் ஜெபா CHE
96) ஜூலியட் ஜெயக்குமார் TIN
97) கலா கிருபாகரன் TIN
98) கலையரசி செல்வராஜ் CHE
99) கஸ்தூரி எலியாஸ் TIN
100) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
101) லதா மைக்கேல்ராஜ் CHE
102) லீலா டேவிட் CHE
103) லீலா ஜெபராஜ் THA-MAH
104) லீலா ஜோஸப் CBE
105) லீனா எலிசபெத் CKA-TPT
106) லில்லி ஜாண்ஸன் CHE
107) லிஸி டென்சிங் TIN
108) மல்லிகா ஜாய்ஸ் (ஜஸ்டினா) JAY
109) மல்லிகா V. CHE
110) மணிமேகலை ஜெயக்குமார் TIN
111) மனோகரம் தனராஜ் NAZ
112) மரிய பாப்பா CHE
113) மரியாள் ஜே.எஸ். TUT
114) மேபல் கிறிஸ்டியான் CHE
114) மெஜிலா ஜோஷ்வா TUT
115) மெர்சிபா CBE
116) மெர்சி ஃபுளோரா பாஸ்கர் VEL
117) மெரிட்டா ஜெயபாலன் TCY
118) மியூரியல் புஷ்பராஜ் CHE
119) நகோமி J TCY
120) நிக்ஸன் எவர்பிரைட் TIN
121) ஆலிவ் ஜெயபாலன் CBE
122) பாக்யபாய் ஆரோன் TIN
123) பமீலா எட்வின் NAG
124) பெர்சி பால் பொன்சிங் TUT
125) பிங்க்லின் தேவமலர் சந்தோஷ் CHE
126) பொன்மணி உத்தமசிங் NAZ
127) பிரேமா பூபாலன் AVD
128) பிரேமா ஜானி PCM
129) பிரேமா ஸ்டாலின் CHE
130) பிரின்ஸ் தயாநிதி CHE
131) பிரின்ஸ்லின் ஷைனி APM-TEN
132) பிரிசில்லா தாஸ் CHE
133) பிரிஸ்கில்லாள் சசி CBE
134) பிரியா ராஜ்குமார் CHE
135) ரேச்சல் கனகராஜ் CBE
136) ராஜகுமாரி சன்னியாசிமுத்து TUT
137) ராஜபிரமீளா TPT
138) ராஜ்மேரி சார்லஸ் KER
139) ரமோலா அதிசயராஜ் TIN
140) ராணி ஃபுளோரா APM-TEN
141) ராணி பிரபாகர் TIN
142) ராணி சாமுவேல்ராஜ் CHE
143) ரத்னா டென்னிஸன் CBE
144) ரத்னாவதி பாண்டியன் CHE
145) ரெஜினா விக்டர் TIN
146) ரோஸ்லின் மார்கிரெட் CHE
147) ரோஸி ஸ்டீபன் CHE
148) ரூபவதி நோபிள் TIN
149) ரூத் HAPP-TCY
150) ரூத் ஜாண்ஸன் TIN
151) சலோமி மனோகர் DR. CHE
152) சம்பு ஜெயச்சந்திரன் MDU
153) சாரா பாலசிங் MDU
154) சரோஜா CHE
155) சரோஜினி எலிசபெத் CHE
156) செல்வ பென்ஸி ஆபேல் KOT-AP
157) செல்வராஜ் K. CBE
158) செல்வராணி ஆல்பர்ட் CHE
159) செல்வி அமிர்தராஜ் TVR

பட்டியல் தொர்ச்சி பக்கம் 18ல்...

# ஜெப-ஜன்னல் ஜப-குறிப்புகள்

**கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - Come! Let us all intercede to God**

1) அகில உலக சமாதானத்துக்காக... இஸ்ரேல்-ஹாமாஸ் போர் மற்றும் உக்ரைன்-ரஷ்யா போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் வங்கதேச பொருளாதாரம் சீரடைய... பெருமழை-வெள்ளம், நிலச்சரிவு, காட்டுத்தீ, பூமியதிர்ச்சி ஆகிய பேரிடர்களின் சேதங்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாதம், வன்முறை வாதம், பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கும் அரசியல் தலைவர்கள் மற்றும் ஆட்சியாளர்களின் முயற்சிகள் முறியடிக்கப்பட.... பழங்குடி மற்றும் சிறுபான்மை மக்களுக்கு எதிரான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... பொருளாதாரம்-விலைவாசி சீரடைய... இந்தியாவில் 2024ம் ஆண்டின் முதற்பகுதியில் நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தல்கள் நேர்மையான முறையில் நடைபெற... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... மக்கள் இன - மத - மொழி வேறுபா டின்றி அமைதியாக வாழ... தமிழ்நாட்டில் விவசாயம், தொழில்கள், வியாபாரம் சிறக்க... தமிழ்நாட்டில் அரசியல் குழப்பங்கள் முடிவுக்கு வர... தமிழ்நாட்டில் மத-வாத, வன்முறைவாத, பிரிவினைவாத சக்திகள் கட்டுப்படுத்தப்பட...

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகள் சிப்ரா, ஜாஸ்மின், ஜாஷ்வா மேத்யூ, வில்சன், DR. கிறிஸ்டினா, கி.ஃப்ட்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜெனிபர், சிந்தியா பிரகாஷ், ஜோ.ஃப்னா ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

6) REV. கருணாகரன், திருமதி.தீபா, திரு. ஆபிரகாம் மனோகர், திரு. டெம்பிள் வில்லியம், திரு. செல்வராஜ், திருமதி. சாந்தி அலெக்ஸ், திருமதி. தங்கசெல்வன், திருமதி. அன்னாள் ஜெபக்கனி, திருமதி. பங்கஜம் வில்சன், திரு. வெஸ்லி சாமுவேல், திரு. நெல்சன் (நகோமி), திருமதி. சுந்தரிபாய், திரு. அப்பன் டேவிட், திருமதி. ஃபிளாரன்ஸ் ராஜமணி, திரு. பிலிப், திருமதி. ஞான ரத்தினபாய் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

7) திருமதி. ஞானம் ராஜசேகர், திருமதி. செல்வி பாண்டியன், திருமதி. ஜெயா சாமுவேல், திரு. ரிச்சர்டு, திருமதி. ராஜேஷ்வரி, DR.ஷீபா, திருமதி. ஜலீன் செல்லத்துரை, திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. விமலா டேவிட், திருமதி. மேரி கிரேஸ், திருமதி. மகிமா சந்திரன், திரு. பி.ஹெச். ஜெயச்சந்திரன், திருமதி. வசந்தா அன்பன், திரு. டி. மனோகர், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

8) நமது ஊழிய ஆதரவாளர்களான திரு.ஜே.ஆர். டேவிட், செல்வி. ஷைனி, திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திரு. எஸ்.ஜே.பி. ராஜா, திரு. அசரியா ஞானதாஸ், திருமதி. நிறைமதி ஜாண்ஸன் திருமதி. வனஜா ஹெர்பர்ட், ஆகியோருக்காக, அவர்களது குடும்பங்களுக்காக...

9) திருமதி. சேர்டியஸ் தாவீது அவர்கள் சுக-பிரசவத்தில் அருமையான குழந்தை பெற்றெடுக்க...

# வேதாகம போட்டி-158

வேதவசன இருப்பிடத்துடன் பதிலளிக்கவேண்டும். கடைசி நாள்: 25-12-2023

வேத–பகுதி: லூக்கா சுவிசேஷம் முழுவதும்

1. இவன்தான் கிறிஸ்துவோ! என ஜனங்கள் யாரைக்குறித்து எண்ணம் கொண்டார்கள்?
2. தன் பிள்ளைகள் எல்லாராலும் நீதியுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்படும் - இது என்ன?
3. இயேசுவின் பாதத்தருகே அமர்ந்து அவர் வசனத்தை கேட்டுக்கொண்டிருந்தது யார்?
4. 'தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்' - சொன்னது யார்?
5. உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்படவேண்டுமென்று கட்டளையிட்டது யார்?
6. 'இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது' - யார்? யாரிடம் சொன்னது?
7. ஜெப ஆலயத் தலைவனாகிய 'யவீரு'வுடைய ஒரே மகளின் வயது என்ன?
8. உத்தமனும் நீதிமானுமாயிருந்த ஆலோசனைக்காரனின் பெயர் என்ன?
9. 'புது ரசத்தைப் புது துருத்திகளில் வார்த்துவைக்கவேண்டும்' - **சரியா, தவறா**?
10. 'கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது' - **சரியா தவறா**?
11. 'பார்வோனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை' - **சரியா தவறா**?
12. 'தீர்க்கதரிசி ஒருவனும் தன் வீட்டிலே அங்கீகரிக்கப்படமாட்டான்' -**சரியா தவறா**?
13. '**இவன்**' தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல:
அ) சிநேகிதன் ஆ) குமாரன் இ) அப்போஸ்தலன் ஈ) சீஷன்
14. '**இவள்**' தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்:
அ) மார்த்தாள் ஆ) யோவன்னாள் இ) எலிசபெத் ஈ) மரியாள்
15. பட்டயம் இல்லாதவன் '**இதை**' விற்று ஒன்றைக் கொள்ளக்கடவன்:
அ) பாதரட்சையை ஆ) வஸ்திரத்தை இ) தானியத்தை ஈ) பாத்திரத்தை
16. இழந்துபோனதை தேடவும் இரட்சிக்கவுமே '**இவர்**' வந்திருக்கிறார்:
அ) நியாயாதிபதி ஆ) தேவன் இ) தேற்றரவாளன் ஈ) மனுஷகுமாரன்
17. முதல்-ஆள் வந்தான் முகம்கோணிச் சென்றான்! 2ம்-ஆள் வந்தான் இரக்கமின்றி சென்றான்! 3ம்-ஆள் வந்தான், நின்றான், இரங்கினான், இளகினான்! **யார் இவர்கள்?**
18. ஆலய-வாசி ஆயா, ஆசேர் கோத்திர ஆயா! தாத்தாவை இழந்த ஆத்தா, தேவனை துதித்த ஆத்தா! தீர்க்காயுசு பாட்டி, தீர்க்கதரிசிப் பாட்டி! **யார் இவர்**?
19. ஓ, ஓ மரமே உயர்ந்த மரமே! உயரம் குறைந்தோனை உயர்த்திய மரமே!
ஆ, ஆ மரமே, அதிசய மரமே! ஆயத்தலைவனின் ஆத்மீக மரமே!
மா, மா மரமே மகிமை மரமே! மகிபன் இயேசுவின் மறையுரை மரமே! **இது என்ன?**
20. கருமேகம் கண்டு கனமழை கணித்தீர்கள்! பூந்தென்றல் வீச புவி-வெப்பம் என்றீர்கள்! வான்-புவி தோற்றத்தின் மாற்றம் சொன்னீர்கள்! **இதை** கணிக்கவில்லை! **அதை** தீர்க்க வில்லை! **இது என்ன? அது என்ன?**

பதிலளிக்க கடைசி நாள்: 25-12-2023 படைப்பாசிரியர்: அருட்திரு.எஸ்ஜேடி. தர்மராஜா

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார். மத்–2:6பி

For, out of thee shall come a ruler
who will shepherd my people Israel. Matt 2:6b



SIS.C. ANGEL

RULER WHO SHEPHERD ISRAEL - kyvernitis pou poimanei Israil

## இஸ்ரவேலை ஆளும் பிரபு

EPISODE-55 கிவர்நிடிஸ் புவ் பொய்மநெய் இஸ்ரயில் பாகம்-55

மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவங்களைத் தொலைக்கிறதற்கும், அக்கிரமத்தை நிவிர்த்திபண்ணுகிறதற்கும், நித்திய நீதியை வருவிக்கிறதற்கும் மனுஷரூபம் எடுத்துவந்த இயேசுவானவரின் நாமத்தில் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்.

**மீகா-5:2** எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங் களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்தி லிருந்த புறப்பட்டு என்னிடத்தில் வருவார்.

நமக்காக பூமியில் பிறந்தவர் இந்தக் காலத்தில் நமக்கு (இந்தியாவுக்கு) என்ன வெல்லாம் செய்யப்போகிறார்?

**மீகா-5:4** இயேசுவானவர் இந்தியாவின்மேல் நின்றுகொண்டு, தமது நாமத்தின் மகத்துவத்தோடு 140கோடி மக்களையும் மேய்ப்பார். தேவபிள்ளைகள் நிலைத்து இருப்பார்கள். இந்திய எல்லைகள் பரியந்தமும் கர்த்தர் மகிமைப்படுவார்.

**ஏசா-49:7பி** உண்மையுள்ள கர்த்தர் நிமித்தமும், இஸ்ரவேலின் பரிசுத்தர் நிமித்தமும் இந்தியாவை ஆளுகிறவர்கள், பிரபுக்கள் இரட்சிப்பின் ஒளியைக் கண்டு பணிந்துகொள்வதை நம் கண்கள் காணும்.

**1சாமு-2:8** இயேசுவின் நாமத்தின் நிமித்தம் பலவித இன்னல்கள், நிந்தைகள், தரித்திரம் மற்றும் சிறையிருப்பைக் கடந்து வருகிற தம் பிள்ளைகளின் கரங்களைப் பிடித்து, தூக்கி நிறுத்தி, அவர்களை உயர்த்தி, பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார். அல்லேலூயா.

**எரே-30:21,22** நம்மை ஆளும் அதிபதியான ஆவியானவர் நம் நடுவிலிருந்து தோன்றுவார். மிகவும் சமீபத்தில் வந்து, 'இவர்கள் என் ஜனங்கள்' என்பார்.

**ஜெபம்:** யூதா கோத்திரத்தையும், சீயோன் பர்வதத்தையும் தமக்குப் பிரியமாக தெரிந்துகொண்ட தேவனே! உமக்கு ஸ்தோத்திரம். உமது பிறப்பைக் கொண்டாடி மகிழும் இம்மாதத்திலிருந்து மேற்சொன்ன ஆசீர்வாதங்கள் எங்கள் வாழ்வில், எங்கள் திருச்சபையில், எங்கள் தேசத்தில் பரிபூரணமாக நிறைவேறவும் உமது திருநாமம் மகிமைப்படவும் கிருபை செய்வீராக. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், பிதாவே. ஆமென்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
C. Angel

தொகுப்பு: சகோ.C. ஏஞ்சல் B.Sc திருநெல்வேலி, தென்னிந்தியா

தேன்-துளி வேத வசனக் கதை-151•

# விசுவாசத்துடன் ஜெபியுங்கள் ஆசீர்வாதங்களைப் பெறுங்கள்

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A., M.ED.

ஜஸ்டின் என்ற ஒரு தேவமனிதர் புகழ்பெற்ற ஒரு கம்பெனியில் வேலை செய்துவந்தார். எதிர்பாராத சாலை விபத்தில் அவரது இரு கால்களும் முறிந்து ஒரு வருடம் சிகிச்சை மற்றும் ஓய்வு எடுக்கும் நிலை ஏற்பட்டது. மருத்துவ விடுப்பில் இருந்த ஒரு வருட காலம் முழுமையான ஊதியம் பெற முடியாததால் குடும்பச் செலவுகளை சந்திப்பது மிகவும் கடினமாக இருந்தது. அவரது மனைவி 'குளோரி'யும் தேவபக்தி உள்ளவர்கள். அவர்களுக்கு 'டக்ளஸ்' என்ற 9ம் வகுப்பு படிக்கிற மகனும் 'ஜாய்ஸ்' என்ற 7ம் வகுப்பு படிக்கிற மகளும் இருந்தார்கள்.

இந்நிலையில், கிறிஸ்மஸ் நெருங்கிக் கொண்டிருந்தது. டிசம்பர் 20ம் தேதிவரை கிறிஸ்மஸ் புத்தாடைகள் எடுக்க, பட்டாசுகள் வாங்க, பலகாரங்கள் செய்ய எந்த வழியும் திறக்க வில்லை. ஆனால் டக்ளஸ், ஜாய்ஸ் இருவரையம் நோக்கி, ''நீங்கள் இருவரும் இயேசு கிறிஸ்துவை நோக்கி ஊக்கத்தோடும் விசுவாசத்தோடும் ஜெபித்தால் நாம் கிறிஸ்மஸ் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாட இயேசு இரட்சகர் நமக்கு உதவி செய்யவார்'' என்று சொல்லி அவர்களை உற்சாகப்படுத்தினார். இதைக்கேட்ட பிள்ளைகள் இருவரும் அனுதினமும் ஊக்கமாக ஜெபித்து வந்தனர்.

என்ன ஆச்சர்யம்! டிசம்பர் 24ம் தேதி அதிகாலையிலே 'குளோரி'யின் சகோரர் (பிள்ளைகளின் மாமா) அவர்கள் வீட்டுக்கு வந்தார். அவர்களுக்கு வேண்டிய புத்தாடை கள், பட்டாசுகள், இனிப்பு வகைகளைக் கொடுத்ததோடு கிறிஸ்மஸ் தினத்தில் நேர்த்தியான பிரியாணி செய்வதற்கு வேண்டிய பணத்தையும் கொடுத்து, 'உற்சாகமாக கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாடுங்கள்' என்று வாழ்த்திச் சென்றார். தங்கள் ஜெபங்கள் கேட்கப்பட்டதை உணர்ந்த பிள்ளைகளும், பெற்றோரும் இயேசு இரட்சகருக்கு முழு மனதோடு நன்றி செலுத்தினார்கள்.

பிரியமானவர்களே! கிறிஸ்மஸ் காலங்களில் மட்டுமல்லாது எல்லா நாட்களிலும், குடும்பங்களுக்கான எப்பேற்பட்ட தேவைகள் வந்தாலும், சகலத்தையும் அதனதன் காலத்தில் நேர்த்தியாய்ச் செய்கிற ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நோக்கி ஊக்கமாக ஜெபிக்கும்போது, அவர் நம் தேவைகளை சரியான நேரத்தில் நேர்த்தியாய்ச் சந்திப்பார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பார்த்து மேலான ஆசீர்வாதங்களைப் பெற அன்புடன் வாழ்த்துகிறேன்.

வேதம் இவ்விதமாய்ச் சொல்லுகிறது...

சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும். லூக்கா–18:1.
நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரிப்படுத்துங்கள். பிலிப்பியர்–4:6
என் ஜெபத்தைத் தள்ளாமலும், தமது கிருபையை என்னை விட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரம். சங்கீதம்–66:20.
மெய்யாய் தேவன் என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார். சங்கீதம்–66:19.


சகோ. அசரியா

Bro. M. Azariah Gnanadoss M.A., M.Ed.
Editor, 'Ratchippu' Tamil Christian Monthly Magazine, Chennai-93. Mobile: 9962924900

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

EPISODE 17

# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு..
# இரண்டாம் வருகைக்குத் தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்




இந்திய திருச்சபை சரிதை:
(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)
தொகுதி-4 பகுதி-2

**தொகுதி -4** கிறிஸ்தவப் பணியின் ஆரம்பம்
**பகுதி -2** கோவா-பிஷப், திருச்சபை-திருப்பணிகள்.

வெகு காலத்திற்கு முன்பே ஆயர்களின் ஆட்சி முடிவுக்கு வந்தது. கிறிஸ்தவ சமூகத்தின் தேவைகள் வேகமாக வளர்ந்து வந்த நிலையில் கோவா பிஷப்ரிக் ஒரு தற்காலிகமான நன்மையைத் தருவதைவிட அதிகமாக எதையும் செய்ய முடியாமல் போயிற்று, போர்த்துகீசிய வணிகர், அலுவலர்கள் மற்றும் கப்பற்படை வருகையின் மூலம் இந்தியாவில் வாழும் கிறிஸ்தவர் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தது.

இந்தியாவிற்கான ஒரு வழக்கமான ஆயர் சபையை நிறுவும் தேவை தெளிவாக இருந்தது. கி.பி.1514ல் போர்த்துகீசிய மன்னர் முதல் முயற்சி எடுத்தார். அது கிழக்கு பகுதியின் மடீராவில் உள்ள ஃபஞ்சல்-பிஷப்ரிக் உருவாக்கத்துடன் தொடங்கியது. முதல் பிஷப் டியோகோ பின்ஹெய்ரோ ஆவார். கடைசி விகாரான தோமர் இப்போது கலைந்துவிட்டார். இந்தியாவின் அப்போஸ்தலிக்க விகார்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றினர்.

ஃபஞ்சல் (Funchal) ஒரு பேராயமாக உயர்த்தப்பட வேண்டும் அந்த கௌரவத் திற்கு அது தகுதியானது என்ற கோரிக்கை வலுத்தது. உடனே, போர்ச்சுகல் மன்னரின் உறவினரான டான் மார்ட்டின்ஹோ போப்பை அணுகினார். புதிய பேராயத்தை உருவாக்குவதற்கு வழக்கத்தை விட குறைவான நேரத்தில் செயல்பட போப் தயாராக இருந்தார். கேப்-வெர்டே தீவுகளுக்கும் அசோர்ஸ் பகுதிகளுக்கும் புதிய பேராயர்-இருக்கைகள் உருவாக்கப்பட வேண்டும்; சாந்தோம் மற்றும் கோவாவிற்கு தயாரான நியாயமான ஒரு முன்மொழிவு தயாராக உள்ளது என்று அறிந்தவுடன் அது போப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்டு ரோமில் அறிக்கை பிரகடனப்படுத்தப்பட்டது. ஃபஞ்சலில் பேராய இருக்கை போப் 7வது கிளெமென்ட்-ஆல் கி.பி.1533 ஜனவரி 31 அன்று அமைக்கப்பட்டது.

புதிய இருக்கையின் முதல் பிஷப்பாக பிரான்சிஸ்கோ டி மெல்லோ நியமிக்கப்பட இருந்தார். இவர் ஒரு சிறந்த அறிஞர், இராஜதந்திரி மற்றும் திருச்சபையில் முக்கிய பொறுப்பை கொண்டிருந்தவர். 42வயது டி-மெல்லோ கி.பி.1533ம் ஆண்டு ஏப்ரல் 27ம் தேதி, ஒரு விபத்தில் பலியானார். அவரது மரணம், வளரும் இந்திய திருச்சபைக்கும், கோவா மறைமாவட்டம் (diocese) உருவாக்க திட்டத்துக்கும் ஒரு பெரிய இழப்பாகும். இதனால் புதிய மறைமாவட்டம் அமைக்கும் அறிவிப்பு கி.பி.1534 நவம்பர் 3வரை வெளியாகவில்லை.

கோவா மறைமாவட்டத்தின் எல்லைகள் ஒரு திசையில் கேப்-ஆ.ஃ.ப்-குட்-ஹோப் (நன்நம்பிக்கை முனை) மறுபக்கம் சீனாவின் இராச்சியம் என வரையறுக்கப் பட்டது. ஃபஞ்சலின் பேராயர் முழு பகுதியிலும் தனது அதிகாரத்தை செயல் படுத்தத் தேவையான அனைத்து வசதிகளுக்கும் முதலீடு செய்யப்பட்டது.

ஒரு பெரிய தலைநகரின் பிஷப்ரிக்குக்கு பொருத்தமான கண்ணியத்துடன் அது, ஒரு பிஷப், ஒரு டீன், ஒரு பேராயர், ஒரு கேண்டர், ஒரு பொருளாளர், ஒரு பள்ளி ஆசிரியர், 12போதகர்கள் என்று அமைக்கப்பட்டு, குழுவுக்கு தலைவரான பிஷப், உயர்ந்த கண்ணியத்துடன் வாழும் வகையில் நிதி வழங்கப்பட்டது.

செயின்ட் கேத்தரின் தேவாலயம், நகரம் மற்றும் மறைமாவட்டத்தின் கதீட்ரலாக சேவை செய்யவும் அனைத்து தேவாலயங்களிலும் தெய்வீக வழிபாட்டை பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல், தேவாலயங்கள், கான்வென்ட்கள் மற்றும் பிற இடங்களில் உள்ள பணியாளர்களுக்கு ஆடைகள் வழங்குதல் மற்றும் தெய்வீக சேவையின் செயல்திறனுக்கு தேவையான ஆபரணங்கள், அவர்களுக்கு போதுமான வருவாய் வழங்குதல், பணியாளர்களை பராமரித்தல் போன்ற அனைத்து கடமைகளையும் நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தியாவில் கிறிஸ்தவ மிஷனரி செயல்பாடுகள் பொதுவாக உயர்தர பள்ளி களை நிறுவுவதை உள்ளடக்கியது. வெளிப்படையாக கிறிஸ்தவ சமூகத்தின் தாக்கம் அத்துடன் முடிவடையவில்லை. பள்ளிகளுடன் அச்சு இயந்திரங்களும் வந்தன, அவை அனைத்து வகையான இலக்கியங்களை பரப்புவதற்கும் உதவி யாக இருந்தன. உண்மையில், ஆரம்பகால வெளிநாட்டு மிஷனரிகள், ஆங்கிலம் மற்றும் நவீன வடமொழிக் கல்விக்கு இந்தியாவில் முன்னோடிகளாக இருந்தனர்.

முதல் பிஷப் நியமனத்தில் மேலும் தாமதம் ஏற்பட்டது. பலர், இந்தியாவில் குடியுரிமை இல்லாத ஒரு பிஷப் இந்தியாவில் தங்குவதற்கு முன்மொழிந்தனர். பிரான்சிஸ்கன் ஜான் டி. அல்புகெர்க் மீது ஒரு நீண்ட தேர்வு பார்வை விழுந்தது. ஜான் டி.அல்புகெர்க் பிறப்பால் ஸ்பானியர், ஆனால் போர்ச்சுகலுக்கு வந்தவர். முடிவில் ஏப்ரல் 22, 1537 அன்று அல்புகெர்க் நியமனக் கடிதம் பெற்று கி.பி.1538 ஜனவரி 13ம் நாள் பிஷப்-ஆக புனிதப்படுத்தப்பட்டார்.

ஜான் டி.அல்புகெர்க் உலகளவில் மதிக்கப்பட்டார், இறுதி வாழ்க்கை வரை பக்தி, பணிவு மற்றும் விடாமுயற்சி ஆகியவற்றிற்கு உயர்ந்த உதாரணமாக கருதப்பட்ட அவர் நியமிக்கப்பட்ட நேரத்தில், ஏறக்குறைய 60வயது நிரம்பியவராக

உடல்நலம் குன்றி இருந்தார். அவர் கோவாவில் தங்கியிருந்தர். அவரது அலுவல் மற்றும் பயணத் திட்டங்கள் போன்ற அனைத்து பணிகளும் அவரது விகார், ஜெனரல். மைக்கேல் வாஸ் என்பவரின் கைகளில் வழங்கப்பட்டு திறம்பட நிறைவேற்றப்பட்டு வந்தன.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd., (Pope's College, Sawyerpuram)
Thiruvanmiyur, Chennai. South India

## வேதாகம போட்டி–157 சரியான பதில் அளித்தோர் பட்டியல்

....11ம் பக்கத் தொடர்ச்சி

160) ஷாலி எடிசன் CHE
161) சாந்தி ஆல்பர்ட் PCT
162) சாந்தி ஆசேர் TIN
163) சாந்தி ஜெயசீலன் CHE
164) சாந்தி ரோஸ் CBE
165) ஷர்மிளா செல்வராஜ் DR. CUD
166) ஷேபா சந்தோஷ் CHE
167) ஷீபா சாம்ஸன் CHE
168) ஷீலா G. PNR-TVL
169) ஷெரீன் ஜெபராஜ் PAN
170) சவுந்தரம் சாலமோன் CHE
171) ஸ்டெல்லா டேவிட் TUT
172) ஸ்டெல்லா கனகராஜ் CHE
173) ஸ்டெல்லா சூசைய்யா TUT
174) சுகிர்தா ஆல்வின் CHE
175) சுகிர்தா சின்னதுரை TIN
176) சுஜாதா சாமுவேல் CHE
177) சுமித்ரா B. CHE
178) சுந்தரிபாய் TUT
179) சுசீலா தியோடர் TCY
180) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
181) தனசீலி ஞானராஜ் CHE
182) தாரா மாணிக்கம் CHE
183) தெல்மா ஸ்டேன்லி MDU
184) உமா குளோரி CHE
185) வனஜா ஹெர்பர்ட் TIN
186) வசந்தா அன்பன் TIN
187) வசந்தா சந்திரசேகர் CBE
188) வசந்தி கருணாகரன் CHE
189) வசந்தி வாசன் CHE
190) விஜயராணி A. CHE
191) விஜி டேனியல் CHE
192) விண்ணரசி ரோஸ் CHE
193) வினோலியா ஜேம்ஸ் TUT
194) வினோலியா வில்சன் VAN
195) வைலட் கிறிஸ்டோபர் TIN
196) வைலட் சைரஸ் CHE

## வேதாகமப் போட்டி-156 சரியானபதிலளித்தோர்

தேவமணி ஆபிரகாம் TUT

## வேதாகம போட்டி–157 (மாற்கு) சரியான விடைகள்

1. அக்கினியினால் மாற்:-9:49
2. பார்வையற்றவர்-இயேசுவிடம் மாற்:-8:23,24
3. வனாந்தரம் மாற்:-1:35
4. மகதலேனா மரியாள் மாற்:-16:9,10
5. சதுசேயர் மாற்:-12:18
6. சிறுபெண்ணே எழுந்திரு மாற்:-5:41
7. சிரேனே-ஊர்-சீமோன் மாற்:-15:21
8. பேதுரு மாற்:-8:32
9. சரி - மாற்:-10:18
10. சரி - மாற்:-9:40
11. சரி - மாற்:-15:37
12. தவறு - மாற்:-8:35
13. ஆ - மனுஷகுமாரன் மாற்:-2:28
14. ஆ - வழியருகே மாற்:-4:4
15. இ - கோடித்துண்டை மாற்:-2:21
16. அ - தேவவசனத்தை மாற்:-7:13
17. தாவீது மாற்:-2:25-26
18. விசுவாசிக்கிறவர்கள்16:-17-18
19. சிவப்பு அங்கி மாற்:-15:20
20. நளதம் - உத்தமதைலம் மாற்:-14:13

**Good Tidings Bible-Prints Ministries**

**நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்**

## Good Seeds - Gospel Tracts
## நல்ல விதைகள் - கைபிரதிகள்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! சுவிசேஷ ஊழியங்களின் பயன்பாட்டுக்காக 20-வகையான கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறோம் மட்டுமல்ல சுவிசேஷ ஊழியம் செய்யும் அன்பர் களுக்கும் திருச்சபைகளுக்கும் கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு வகை கைப்பிரதியை வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதி களை Sponsor செய்து இயேசுவின் அன்பை அனைத்து மக்களும் அறிந்திட உதவிடுங்கள். Sponsor செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளும்படி அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

| No.&Title of the Tract | Sponsor's Name |
|---|---|
| 1. மைனாவின் கதை - The story of Myna | - Rev. S.J.D. Dharmaraj, Che-93 |
| 2. வக்கீல் நீதிபதியானார் - Counsel became Judge | - Mr.T. David Manohar, Che-93 |
| 3. மாட்டு உண்ணி - The Cattle Tick | - Mr.R.G. Sutharsingh, Che-93 |
| 4. கர்வமான காகிதப்பட்டம் - The Envious Kite | - Mrs. Rani Samuelraj, Che-93 |
| 5. டிரைவர் இல்லாத ரயில் - A Train without Driver | - Mr. Prasad Samuel, Cud-6 |
| 6. சீரழிக்கும் சீமைக்கருவை - Acacia of fence | - Mr.P.H. Jaychandran, Che-93 |
| 7. குடிநீர் குழாயில் குண்டுத்தவளை - Frog in tap | - Mr.R.C.P. Nixon, Che-93 |
| 8. இளவரசனும் கைதியும் - Prince and the Convict | - Mr.J. Albert, Kumbakonam |
| 9. கடலில் கல்லறைத் தோட்டம் - Bermuda Triangle | - Mr.C. James, Sirkali |
| 10. பற்றியெரியும் மனிதர்கள் - Human Combustion | - Mr.S. Nixon Everbright, AP |
| 11. டைட்டானிக் கப்பல் - The Titanic Ship | - Dr. Sharmila Selvaraj, Cud-1 |
| 12. நாக்குப்பூச்சி - The Tape Worm | - Mr. Arthur Masilamani, Che-7 |
| 13. அதிசய சொட்டு மருந்து - Miracle Drops | - Rev. S.J.D. Dharmaraj, Ch-93 |
| 14. எரியும் முன் எச்சரிக்கை - Warning before death | -Mr.A. Santharaj, Kumbakonam |
| 15. பிணக்குவியலில் இருந்து - From pile of Corpses | - Mr. S.J.P. Raja, Che-126 |
| 16. வெந்நீரில் தவளை - The Frog Experiment | - Mrs. Stella David, Tuticorine |
| 17. கன்கார்டு விமானம் - The Concord Aircraft | - Mr.B. Wilson, Che-92 |
| 18. ஜீன் வால் ஜீன் - Jean Valjean | - Mr. Samson Abraham, Che-93 |
| 19. பெர்லின் சுவர் - The Berlin Wall | - Mr.A. Inbaraj, Kumbakonam |
| 20. மரணத்தின் சாலை - El Camino de la Muerte | - Mr. Frankline Christus, Ch-93 |

கைப்பிரதிகளை Sponsor செய்த தேவபிள்ளைகளுக்கு எங்கள் நன்றி. கைப்பிரதிகளை எங்களிடம் இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்தும்படி அன்புடன் வேண்டுகிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமேன்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சென்னை-93. தென்னிந்தியா.

Ratchippu Tamil Monthly. Registered News Paper.

Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 9th December 2023.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.

# செய்தித்துளிகள்

1. இம்மாதம் முதல் பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லாந்து, இத்தாலி, ஸ்பெயின், மலேசியா ஆகிய 6நாட்டு மக்கள் விசா-இன்றி சீனா சென்று 15நாள் தங்க அந்நாடு சோதனை முயற்சியாக 1வருட காலத்திற்கு அனுமதி அளித்துள்ளது.

2. இந்தியா முழுதும் ஐடி கம்பெனி பணியாளர்களின் வீடு மற்றும் அலுவலகம் இடையே தினசரி குளிர்சாதன பேருந்து சேவையை மார்ச்-2024முதல் வழங்கவிருக்கிறது ஊபர் நிறுவனம். இதன்மூலம் 2கோடி பேர் பயன் பெறுவர்.

3. சென்னை - விழுப்புரம் - திருச்சி மற்றும் திருச்சி - மதுரை - நெல்லை - குமரி மார்க்கங்களில் இயங்கும் ரெயில்களின் வேகம் முறையே 2026 மற்றும் 2027ம் ஆண்டுகளுக்குள் மணிக்கு 130கி.மீ ஆக உயர்த்தப்படும் - தெற்கு ரெயில்வே.

4. போர்ட்டபிள் விமான-எதிர்ப்பு-ஏவுகணை சாதனத்தை (இக்லா-எஸ்) இந்தியாவுக்கு வழங்கவும் மற்றும் இந்தியா விலேயே தயாரிக்கவும் உரிமம் வழங்கும் ஒப்பந்தத்தில் இந்தியா மற்றும் ரஷ்யா நாடுகள் கையெழுத்திட்டன.

5. உலகக் கோப்பை கால்பந்து போட்டியை 2026ல் அமெரிக்கா, 2030ல் ஸ்பெயின், 2034ல் ஆஸ்திரேலியா நடத்தவிருந்த நிலையில் ஆஸ்திரேலியா அப்பொறுப்பிலிருந்து விலகியதால் 2034ல் சவுதி-அரேபியா அப்போட்டிகளை நடத்துகிறது.

Posted on: 9th December 2023

To

# கிறிஸ்துமஸ் – 2023

**இரட்சிப்பு** பத்திரிக்கையின் **நல்வாழ்த்துக்கள்**

வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், கைப்பிரதி களப்பணியாளர்கள், திருச்சபைப் போதகர்கள், இறைமக்கள், இரட்சிப்பு-விசுவாச-குடும்பத்தார் அச்சகத்தார் மற்றும் தபால்-துறை நண்பர்கள் ஆகிய அனைவருக்கும் எங்கள் இதங்கனிந்த **கிறிஸ்மஸ்-2023**
**நல்வாழ்த்துக்கள்.**




**இரட்சிப்பு**
ஊழிய-குடும்பத்தார் Dec 25, 2023

If undelivered Please return to:

REV.S.J.D. DHARMARAJA
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2-A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI -93, TAMILNADU, SOUTH INDIA.

Owned & Published by: S.J.D.Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.